வருகிறதென்றால், இந்தியாவிலேயே அதிகமாக M.B.B.S. seats *நம்முடைய மாநிலத்தில்தான் இருக்கின்றன. கிட்டத்தட்ட* State quota *மட்டும் 3,968 இடங்கள் இருக்கின்றன. இந்த 3,968 இடங்களும் தமிழகத்தைச் சார்ந்த, தமிழகத்தில் இருப்பிடச் சான்றிதழ்களை முறையாகக் கொடுக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு மட்டுமே வழங்கப்படும் என்ற நிலைப்பாட்டை அரசு உறுதிபட ஏற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

(அ) தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு, 'கஜா' புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சேதமடைந்த சாலைகள் மற்றும் பாலங்களை மறுசீரமைத்தல், ஊரகப் பகுதிகளில் சமுதாய உறிஞ்சுக் குழிகள் அமைத்தல், கிராமப்புறங்களில் தண்ணீரைச் சேமித்திட தடுப்பணைகள் கட்டுதல், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு, சேலத்தில் செயல்படும் தமிழ்நாடு கிராம வங்கிக்கு வளாகம் அமைத்திட நிலம் ஒதுக்கீடு உள்ளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த சில அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.*

1. மாண்புமிகு அம்மா அவர்கள் 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தினை 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இதற்கான நிதி ஒதுக்கீடு கடந்த 2018–2019 ஆம் ஆண்டில் 1,200 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டிலும், 1,200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன்மூலம், 5,000 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 10

2. 'கஜா' புயலினால் கட்டடங்கள், சாலைகள் மற்றும் பாலங்களுக்கு அதிக அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டன. இதனைக் கருத்தில்கொண்டு, 'கஜா' புயலினால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் கோட்டத்திற்குட்பட்ட சேதமடைந்த சாலைகள் மற்றும் பாலங்களில் மறுசீரமைப்புப் பணிகள் 200 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பழுதடைந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகளை வலுப்படுத்தவும், தார் இடப்படாத சாலைகளைத் தார்ச் சாலைகளாக மேம்படுத்தவும், நடப்பாண்டில் 255 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரகச் சாலைகள் மேம்பாடு மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

4. ஊரகப் பகுதிகளில், குடியிருப்புகளின் சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், சாலைகள் மற்றும் தெருக்களில் தேங்காமல் தடுத்திடவும், நீர் வடிக்கப்பட்டு நிலத்தடி நீர் செறிவூட்டவும், நோய்த் தொற்று ஏற்படாமல் பாதுகாக்கவும், தனி நபர் உறிஞ்சுக் குழிகள் அமைக்கவும், ஊரகப் பகுதிகளில், ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கழிவு நீர் வடிகால்களைச் சுற்றி கழிவுநீர் தேங்காமல் தடுத்திட 2 இலட்சத்து 500 சமுதாய உறிஞ்சுக் குழிகள், 183 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் நடப்பாண்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கிராமப்புறங்களில் தண்ணீரைச் சேமித்து பாசனத்திற்குப் பயன்படுத்திடவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களைக் கொண்டு நடப்பாண்டில் 10,000 தடுப்பணைகள் 312 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக மற்றும் நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் குறித்த நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் போதுமான கடன் கிடைக்க வழிவகை

2019 ஜூலை 10] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

செய்ய, கடந்த 2018–2019 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் விதி எண் 110–ன்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக 11 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்படும் என்ற இலக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த இலக்கினையும் விஞ்சி, 11 ஆயிரத்து 449 கோடி ரூபாய் கடன், வங்கிகள்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. நடப்பாண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பின்மூலம் 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை நான் இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டம், நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டம் நடப்பாண்டு முதல் அடுத்த 4 ஆண்டுகளுக்கு 210.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் தலா 4 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். இவ்வாண்டு இந்தத் திட்டத்திற்கு 40.61 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வட்டார அளவில் மேம்படுத்தப்பட்ட வலுவான கூட்டமைப்பை உருவாக்குதல், இணைய வழி நிதிப் பரிமாற்றம், பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத பிரிவுகளில் தனி நபர் மற்றும் கூட்டுத் தொழிலுக்கான வணிக மேம்பாட்டினை ஊக்குவித்தல் போன்றவை இத்திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படும்.

3. ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள்மூலம் பல்வேறு தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப கிராம மற்றும் நகர்ப்புற இளைஞர்கள் திறன் பயிற்சி பெற வழிவகை செய்யப்படும். இதற்காக நடப்பாண்டில் 125 கோடி ரூபாய் செலவில் 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. பல்லவன் கிராம வங்கி மற்றும் பாண்டியன் கிராம வங்கி ஆகிய இரண்டு மண்டல ஊரக வங்கிகள் 1–4–2019 அன்று ஒருங்கிணைந்து, மாநிலம் முழுவதும் 630 கிளைகளைக்

கொண்டு "தமிழ்நாடு கிராம வங்கி" என்ற பெயரில் சேலத்தினை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்றது. இதற்கென தமிழ்நாடு கிராம வங்கியும், ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த ஒரு வளாகம் அமைக்க சேலத்தில் 2 ஏக்கர் அரசு நிலம் வழங்கப்படும். இவ்வளாகம், வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகள் அனைத்தையும் வழங்கும் ஒரு மையமாக செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் சார்-நீதிமன்றங்களுக்கு அடுக்குமாடிக் கட்டடம் கட்டுதல், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் மற்றும் நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுதல் தொடர்பான சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் தற்போது இயங்கிவரும் பல்வேறு சார்-நீதிமன்றங்களுக்கு கூடுதல் இடம் அளிப்பதற்காக 202.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் அடுக்குமாடிக் கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கான ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், வாகன நிறுத்தம், உணவகக் கட்டடம் மற்றும் பொதுக் கழிப்பிடம் போன்ற கூடுதல் வசதிகளுடன் 5.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், சுற்றுச் சுவர், வாகன நிறுத்தம், இரு சக்கர வாகன நிறுத்தம், உணவகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் 10.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)